## கம்பஹா பிரதேச சபை
## கம்பஹா மாவட்டம்

### 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 செப்தெம்பர் 20 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கம்பஹா பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் ரூபா 19,365,920 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வெலிவேரிய வாராந்த சந்தை மூலதனமாக்கப்படுகையில் அன்பளிப்பாக கணக்கீடு செய்யப்படாது மூலதனச் செலவினத்திற்கு வருமானப் பங்களிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 74,799,190 தொகையான பெறவேண்டிய முத்திரைக் கட்டண மீதியில் 2008 ஆம் ஆண்டிற்கு

உரித்தாக பெறவேண்டிய முத்திரைக் கட்டண மீதி ரூபா 15,888,063 ஆகக் காணப்பட்டது. இத் தொகையில் ரூபா 14,518,970 தொகை 2010 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் பெறவேண்டியவையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டின் போது பெறவேண்டிய அமைச்சர் படிப்பணமான ரூபா 81,000 தொகை இரு முறை ஒதுக்கப்பட்டிருந்தமையால் பெறவேண்டிய அமைச்சர் படிப்பணம் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) உணவு அதிகாரச்சட்டத்திற்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்ட தவறு தொடர்பாக தொடரப்பட்ட வழக்குத் தொடர்பாக அறவிடப்பட்ட தண்டப்பணத்தில் 75% தொகை உள்ளூராட்சி அதிகாரசபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு 25% தவறிழைக்கப்பட்டவராக கண்டுபிடித்த உத்தியோகத்தருக்கு வழங்கப்படுவதற்கு வைப்புக் கணக்கில் வைத்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையால் மொத்தத் தண்டப்பணமும் வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. 2007 முதல் 2012 ஆம் ஆண்டு வரை அவ்வாறு வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த மொத்தத் தண்டப் பணம் ரூபா 973,332 ஆகக் காணப்பட்டது.

(உ) 2007 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய மூலதன நன்கொடைக் கடன்பட்டோரான ரூபா 18,838,473 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது கணக்குகளில் முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

11 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 296,422,834 ஆக இருந்ததுடன் அதற்குரிய துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் படியான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 263,452,446 ஆக இருந்தது. இதன் படி இணக்கம் செய்யப்படாத வேறுபாடு ரூபா 32,970,388 ஆகக் காணப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 84,216,728 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,498,820 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,918,515 ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

சபைச் செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டவை** | **உள்ளபடியானவை** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை** |
|---|---|---|---|---|
| | | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| (i) | வீதவரியும் வரியும் | 12,992 | 11,643 | 32,058 |
| (ii) | வாடகை | 1,129 | 1,131 | 41 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 688 | 726 | 1,257 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,368 | 5,134 | 2,684 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

(அ) மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | **ரூபா** |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 13,363,505 |
| முத்திரைக் கட்டணம் | 74,799,190 |

(ஆ) 4 ஆண்டுகளுக்கு மேல் ரூபா 11,581,657 தொகை பெறவேண்டிய முத்திரைக் கட்டணமாகவும் 5 ஆண்டுகளுக்கு மேல் ரூபா 7,363,505 தொகை நீதிமன்ற தண்டப்பணமாகவும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண வருமான ஆணையாளரின் 2011 சனவரி 13 ஆம் திகதிய ப்ப/ஆதா/கொ/பொது கடிதத்தின் படி நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி முதல் 5 ஆண்டுகளுக்குள் நீதிமன்றப் பதிவாளராலோ அல்லது பெயரிடப்பட்ட உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட பதிவேட்டுடன் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நீதிமன்ற தண்டப்பணப் பதிவேட்டின் படி கணக்காய்வுத் தினம் வரை 2005, 2011, 2012 ஆம் ஆண்டுகளின் நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்படுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முத்திரைக் கட்டண உரிமை கோரல் 3 ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட்டிருந்ததுடன் 2009 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து முத்திரைக் கட்டணம் அறவிடப்படுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.3 வீதவரி**

2013 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் நிலுவையான வீதவரி மீதி ரூபா 29,877,269 ஆகக் காணப்பட்டதுடன் இம் மீதியில் ஒரு வருடத்திற்கும் மேலான காலம் கடந்த ரூபா 5,000 இற்கு மேலான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,199,902 காணப்பட்டது.

**2.2.4 ஏனைய வருமானம்**

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான கடை வாடகை ரூபா 2,032,479 தொகையான மீதியில் ஒரு வருடத்திற்கும் மேல் பழைமை வாய்ந்த ரூபா 429,179 தொகையான மீதி காணப்பட்டதுடன் உடைத்து அகற்றப்பட்ட 12 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த வாடகைத் தொகை ரூபா 191,402 ஆகக் காணப்பட்டது.

(ஆ) பிரதேச சபைக் கட்டிடத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் 2007 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 1,614,551 தொகையான நிலுவையான பொருட்கள் மற்றும் சேவைகள் வரி பல வருட காலம் கடந்தும் உரிய தரப்பினரிடமிருந்து தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

(அ) பிரதேச சபைக் கட்டிடத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்ட வியாபார நிலையங்களில் 12 வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன் கடைகளை ஒப்படைக்கையில் முறையாக உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிராமையால் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. இக் கடைகளை சபை ஏற்றுக்கொண்டு கடை வாடகையை மீள மதிப்பிட்டு கேள்வியின் மூலம் மீள குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது கடை வாடகை மீட்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது கடைகள் நிர்மாணிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அறவிடப்பட்ட வாடகைத் தொகையே தொடர்ந்தும் அறவிடப்பட்டு வந்தது.

(இ) மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2012 இன் கீழ் சபை அதிகாரப் பிரதேச வீதியில் பிணைப்புக் கல் பதிக்கும் செயற்திட்டம் 06 இற்காக ரூபா 3,000,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந் நடவடிக்கை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) வருமான நிருவாகம்